Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆ (1889) ஆவணி௴ 28௳ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது — தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுக] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி வரு தை மீ ௨௫ உ வெள்ளிக்கிழமை (7 FEB 1958) [இல-சஉ]

## இந்து முஸ்லிம் விடுமுறைநாள்பற்றி யாழ்ப்பாண நகரசபையிற் பிரேரணை

கடந்த 13-1-58ஆம் திகதி நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் உதவி மேயர் திரு. சோ. இராசரெத்தினம் அவர்கள் கீழ் வரும் பிரேரணையைப் பிரேரித்தார்.

இந்து சமயத்தவர்களின் சிறந்த விரத தினங்களாகிய மகாசிவராத்திரி, ஆடி அமாவாசை இரண்டினையும் அரசாங்க விடுமுறை தினங்களாகச் சேர்க்கத் தவறியது குறித்து இச்சபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் மேற்படி இரண்டு தினங்களையும் அரசாங்க விடுமுறைத் தினங்களாகச் சேர்த்துக் கொள்ளுமாறு கௌரவ உள்நாட்டு அமைச்சர் அவர்களை இச்சபை வேண்டிக்கொள்ளுகின்றது.

குவாஸி. எம். ஏ. எம். எம் சுலதான் இப்பிரேரணையை ஆதரித்ததுடன் திரு நபி ஜனனதினத்தையும் இதில் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

திரு. சோ. இராசரெத்தினம்அவர்கள் திரு குவாஸி எம். ஏ. எம். எம் சுல்தான் அவர்களின் திருத்தத்தை ஏற்றுக்கொண்டார்.

ஈற்றில் பிரேரணை கீழ் வரும் திருந்திய உருவில் நிறைவேறியது.

இந்து சமயத்தவர்களின் சிறந்த விரத தினங்களாகிய மகாசிவராத்திரி, ஆடி அமாவாசை இரண்டினையும் முஸ்லிம்களின் முக்கிய தினமாகிய திரு நபி ஜெனனதினத்தையும் அரசாங்க விடுமுறைத் தினங்களாகச் சேர்க்கத் தவறியது குறித்து இச்சபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துககொள்வதுடன், மேற்படி மூன்று தினங்களையும் அரசாங்கவிடுமுறை தினங்களாகச் சேர்த்துக் கொள்ளுமாறு கௌரவ உள்நாட்டுஅமைச்சர் அவர்களை இச்சபை கேட்டுக் கொள்ளுகின்றது.

---

# அன்பும் ஞானமும்

## அகப்புற உறுப்புக்கள்

## சமயம் என்பதுபற்றி கலாநிதியின் விளக்கம்

இந்திய உபசனாதிபதி கலாநிதி இராதாகிருஷ்ணன் அவர்கள் கொழும்பு நகரமண்டபத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் கொழும்பு விவேகானந்தசபை ஆகியவற்றின் ஆதரவில் சுவாமி ஸ்ரீ பிரேமானந்தா அவர்கள தலைமையில் நடந்த கூட்டத்தில் பேசும்போது "தீண்டாமை, வகுப்புவாதம், சாதிவேற்றுமை மதத்துவேஷம் ஆகியன இன்று எங்கள் சமுதாய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகவிருக்கின்றன. இத்தடைகளை நீக்கி எங்கள் எல்லோரையும் ஒரே உலகத்தவர்களாக்கும்படி இந்து சமய வேதங்களிலும் பௌத்த, கிறீஸ்தவ, இஸ்லாமிய தர்மங்களிலும் கூறப்பட்டுள்ளன. நாங்கள் ஒருவரில் இன்னொருவர் தங்கி யிருப்பவர்களாக வளர்ச்சியடைந்துகொண்டு போகிறோம். இன்று எந்தத் தேசமாவது தனி இராச்சியமாகவோ, சுய திருப்தியுடனோ இருக்க முடியாது.

"நான் கொழும்புக்கு வந்து இது மூன்ருவது தடவையாகும். பாரதமும் ஈழமும் முன்பு அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்த நாடுகளாகும். இன்று நாங்கள் சுதந்திரமடைந்துள்ளோம். இச்சுதந்திரம் இன்று எங்களுக்கு ஒரு அறைகூவலாகும். எங்கள் மீது மிகப் பெரிய பொறுப்பை இச்சுதந்திரம்தந்துள்ளது. எங்கள் நாடுகள் இரண்டும் மக்கள் பராமரிப்பு அரசாங்கத்தை ஸ்தாபிக்க முயல்கின்றன இது விஷயத்தில் நாங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

நாங்கள் அனைவரும் ஒரே உலகத்தைச் சேர்ந்தவர்கள். எங்கள் நாட்டுப் பற்று, ஒரு உலக சமுதாயத்தை உருவாக்கும் தத்துவத்தையுடையதாகவிருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் தனிமையான வாழ்க்கையுமுண்டு என்பதை அவன் உணரவேண்டும். சமயம் மதச்சடங்குகளை மட்டும் கொண்டதல்ல. அதற்கு உள்ளேயும் வெளியேயுமுள்ள அம்சங்கள் ஞானமும் அன்புமாகும். இந்த இலட்சியங்களுக்காக வாழும் விஷயத்தில இந்தியாவைப்போன்று இன்று வலிமை குன்றிய தேசம் வேறெதுவுமில்லை. கீழைத்தேச மக்கள் யாவருமே இன்று மதி நுட்பம், கலாசாரம் ஆகியனவற்றில் பிற்போக்கான நிலையில் உள்ளனர். அதனுற்ருன் அன்னியர் எங்களை அடிமைப்படுத்தினர். இன்று கீழைத்தேசத்தவர்கள் அரசியல் சுதந்திரத்துக்கு மட்டும் போராடினுல் போதாது. ஒரு புதிய உலகத்திற்காகிய பரந்த மனப்பான்மையும் அவர்கள் வளர்க்கவேண்டும்.

உலகத்தில் ஏற்கெனவே பெரும் மாறுதல்கள் பல ஏற்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பெரிய மாறுதல்கள் இன்று நடக்கின்றன. இது ஒரு புதிய உலகத்திற்காக இருக்கலாம். அல்லது இந்த உலகத்தின் அழிவிற்காக இருக்கலாம்.

இன்று எந்த விதமான இராணுவ பலத்தினுலும் ஒருவரையொருவர் நசுக்க முடியாது. புதிய மக்கள் புதிய சிந்தனையுடன் இன்று தோன்ற வேண்டியிருக்கின்றது.

மதம் என்பது என்ன? மனிதன் தன்னைத்தானே மாற்றி அமைத்துக் கொள்ளும் வழிதானே! எல்லா மதங்களும் இதனைத்தான் கூறுகின்றன. மனிதன் தன்னைத்தான் மாற்றி அமைத்துக் கொள்வதற்கு-அதாவது தன்னைப் புதிதாக்குவதற்கு அவனிடத்து ஒழுக்கம் இன்றியமையாதது, என்று கூறினர்.

---

# சுதந்திரதின எதிர்ப்பிற்சுதியில்லை

## 'அடுவல்' ஆரவாரம் அமைதியான ஆவேசம்

### பிரதமரின் மனச்சமாதானத்துக்குப் பெருந்துணை

பெருந் திருவிழா நடத்தி வறுமைப்பட்டவர் கோயிற்பொறுப்பில் வைபவத்தை விட்டமாதிரி மாசி நாலாம்நாள் எதிர்ப்பு மரபுமாறி உப்புப் புளி ஒன்றுமில்லாத வகையில் ஒப்பாசார வழியிற் சீர்கெட்டுத் தோன்றியதை ஆராய்ந்து பார்க்குமிடத்து அரசியல் அலை வீச்சுக் குலைந்து விட்டதுபோலப் புலப்படுகின்றது. மூடுகடையென்று அரசாங்கக் கடைச் சட்டம் விதித்ததை ஆமோதித்துக் கடைகளை மூடுங்கள் என்று இம்முறை கேட்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை திறந்து கடையை நடத்தி கடைச்சட்டத்தை மீறுங்கள் என்று வற்புறுத்துவார்களுமில்லை. ஆனல் வழமைபோல வியாபாரமோ வேலையோ சாதாரணமாக நடைபெற்றது; வெள்ளம் விளைவித்த விநோத மனப்பான்மையா இதற்குக் காரணம்?

மாசி நாலாம் நாளைத் துக்க தினமாகக் கொண்டாடவேண்டும் என்றமுடிபு பல திறப்பட்ட வகையில் அரசியற்கட்சிகளால் அனுசரிக்கப்பட்டது.

சமஷ்டிக் கட்சி வாலிபர் முன்னணி மாநாடு கூட்டி அமைதியான எதிர்ப்பைக் காட்டும்படி கேட்டுக் கொண்டதோடு சிங்களச் சிறி எதிர்ப்பு இயக்கத்தையும் சமஷ்டிக் கட்சியின் ஆலோசனைக் கிணங்கப் பின்போட இணங்கியது.

தமிழ் மாநாட்டுக் கட்சி பாடிகாவலர் அணிவகுப்பை எதிர்த்து இல்லாமற் செய்தல் வேண்டுமென்று யோசித்து முற்றவெளியில் அணிவகுப்புக்கு முன் நின்று ஆர்ப்பாட்டஞ்செய்தது. ஆனல் அணிவகுப்பும் நடந்தது.

பொது வாலிபர் முன்னணியொன்று சுன்னுகத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூடி மாசி நாலாம்நாள் வைபவத்தை மறுத்தல் வேண்டும் என்று பேச்சு நிகழ்த்தியது.

இவ்வளவுதான் 1958. மாசி நாலாம்நாள் நடந்த எதிர்ப்பின் பொழிப்பு. இவ்வளவும் போதாத சர்வம் சமாதானம் என்று பேச்சளவில் மனச் சாந்தியைப் பெறமுயலும் முதல் அமைச்சருக்கு? சுதந்திர தினப் பேச்சிலே பிரதமர் சமரச ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு இம்மியளவுதான் என்றும் அந்த இம்மியும் இப்பொழுது இல்லை என்றும் கூறுவதற்குத் துணிபு வேண்டுமல்லவா? வந்த வெள்ளம் இருந்த எதிர்ப்பு வெள்ளத்தையும் அள்ளிக்கொண்டு போனதுதானவந்த தொல்லை.

---

# ஆரியமும் - தமிழும்

## ஒன்ருேடொன்று தொடர்புடையன

### ஆரியதிராவிடபாஷாபிவிருத்திச்சங்க ஆண்டுவிழாவில் அறிவுரை

கருத்துக்கள் அறிவும், அன்பும் என இருதிறப்படும். கருத்தின் வெளிப்பாடான ஒலியும் இருதிறப்பட்டு இரு பாஷையாகும் ஒன்று அறிவுப் பாஷை; மற்றது அன்புப் பாஷை இரண்டும் ஒன்ருேடொன்று தொடர்புள்ளவை. அன்புப் பாஷையே வழங்குதற்குரியது. ஆரியம் பாரத தேசத்தின் அறிவுப்பாஷை. அது திசை மொழியன்று. வழங்கும் பாஷைகளைவளர்க்கும் பாஷை அது. தமிழ் அன்புப் பாஷை; வழங்கும் பாஷை. கன்னிமையும் பொருளிலக்கணம் உண்மையும் அதன் இரு பெருஞ் சிறப்புகள்.

தமிழ்ப்பாஷை ஆரியத்தின் உதவியை வேண்டும்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஞூ தை மீ
உரு உ வெள்ளிக்கிழமை


## பத்து ஆண்டுகளின் பின்னும் பயனற்றநிலைமையா?

ஈழநாட்டின் ஆட்சி உரிமையை இந்நாட்டு மக்களிடம் அளிக்கின்றோம் என்று கூறிக்கொண்டே ஆங்கிலேயர்கள் அகன்றார்கள் என்பது உண்மையே. அவ்வாறு அந்நியர்களில் மனமாற்றம் உண்டு பண்ணுவதற்குப் பெரிதும் உழைத்தவர்கள் இலங்கையிலுள்ளவர்கள் அனைவரும் என்பதும் உண்மையே. புறநாட்டாரின் ஆதிக்கம் போனபின்பு ஈழத்து மக்களின் ஆட்சி யார்கையிற் சென்றதென்பதை அன்றுதொட்டு இன்று வரைக்கும் இங்கு நடைபெற்ற அரசியல் நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்த்தால் அறியலாம்.

இந்நாட்டு மக்கள் எல்லாரும் ஒருங்கு சேர்ந்து ஆட்சியை நடத்தும் நிலைமை இந்த அரசியல் மாற்றம் நிகழ்ந்தபொழுது இருக்கவில்லை. தமிழ் பேசும் மக்களுக்கு சமஉரிமை நிலைமை அந்தப் புது ஆட்சி முறையில் இல்லை என்று தமிழ்த் தலைவர்கள் வாதாடினார்கள், எதிர்த்தார்கள், மறுத்தார்கள். ஆனால் சிங்களத் தலைவர்கள் அரசியற்றந்திர முறையைக் கையாண்டு சினேக பான்மையைப் பேச்சிற் காட்டிப் பாராளுமன்றத் தேர்தலிலே தமிழ்பேசும் மக்கள் கலந்து கொள்ளச் செய்தார்கள். அப்பால் ஆண்டுகள் கழிந்தன. ஐக்கிய தேசியக்கட்சி தனிச் சிங்கள மனப்பான்மையை நடைமுறையில் மட்டுமன்றி வெளியரங்கத்திற்கொள்கை அறிக்கைமூலமாகவும் காட்டத் தொடங்கியது. இக்கட்சியை 1956-ம் ஆண்டுத் தேர்தலிலே தோல்வியுறச் செய்த மக்கள் ஐக்கியமுன்னணிஆட்சி, நிலைமையைச் சீர்கெடப்பண்ணித் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொணர்ந்தது. மக்கள் ஆட்சியென்பது எண்கணக்கிற் கூடுதலாகவுள்ள இனத்துக்கே உரியது என்றும் ஏனையோர் இந் நாட்டிலே தாழ்த்தப் பட்டவர்களாயே வாழ்ந்து வருதல் வேண்டும் எனவும் சுட்டிக் காட்டுகின்ற சுதந்திரத்தை ஆறறிவு படைத்த மனிதகுலம் ஏற்றுக்கொள்ளுமா என்று கேட்கின்றோம். மாசி நாலாம நாளின் மகத்துவம் எத்துணை யென்பதை அயல்நாட்டு அரசியற்றலைவர்கள் ஆராய்ந்து அறிதல் வேண்டும் என்றும் விரும்புகின்றோம்.

ஈழத்தின் மக்கள் ஆட்சி அரசியல் பிழைத்தது என்றே மனித மகத்துவத்தையும் அதன் புனிதமான பண்பாட்டையும் உணர்ந்தவர்கள் ஐயமின்றிக் கூறுவார்கள். மாசி நாலாம் நாளில் நடந்த வைபவத்தில் தமிழ் மக்கள் கலந்து கொண்டார்களா? தமிழ்ப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் சமூகமளித்தார்களா? இந்நிலைமை எதைக் குறிக்கின்றது?

ஈழத்தில் தமிழ்பேசும்மக்களின் எண் என்ன? நூற்றுக்கு நாற்பதுக்கு மேற்பட்டவர்களின் வேற்றுமைமைக்கிடமான விடுதலை விழாவும் ஒரு விழாவாகுமா? தேன் போன்று தித்திக்கத் தக்கதாகச் சமரசமாகப் பேசி "நல்ல காலம் வரும் நாங்கள் உங்களை ஒடுக்க மாட்டோம் ஒதுக்கமாட்டோம் உங்கள் மொழிக்கும் இடமுண்டு எங்களுக்கு அவ்வாறு இடங்கொடுப்பதற்கு மனம் உண்டு" என்று தலைமை அமைச்சர் சமயம் பார்த்து நட்புரிமை நல்வாக்குக் கூறிவிட்டால் நடைமுறையிலுள்ள நயவஞ்சகத் தனிச்சிங்கள ஆட்சிநிலைமை மாறிவிடுமா? தமிழ் பேசும் மக்களின் [illegible] காப்பாற்றப்படுமா?

# இதயம் மலர்ந்த மகிழ்ச்சியுடன் யாழ். மாநகரசபை வரவேற்பு

(யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்தில் இந்திய குடியரசு உப அதிபதி கலாநிதி ச. இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு உபசாரப் பத்திரம் மாநகர சபைத் தலைவர் திரு. பொ. காசிப்பிள்ளையால் வாசிக்கப்பெற்று அளிக்கப்பட்டது. மேடையில் யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர்கள் சமுகமாயிருந்தனர்.)

மாட்சிமைதங்கிய தலைவ!

பண்டைத் தமிழ் மன்னர்களின் அரசிருக்கையாகத் திகழ்ந்ததும், இலங்கையில் தமிழ்ப்பண்பாட்டின் கேந்திர ஸ்தானமாக விளங்குவதுமான சரித்திரப் பிரசித்தி பெற்ற எங்கள் யாழ்ப்பாண மாநகரத்துக்குத் தாங்கள் வருகை புரிந்தஞான்று, இம்மாநகரசபைத் தலைவரும், உறுப்பினர்களுமாகிய நாங்கள் எங்கள் இதயம் மலர்ந்த மகிழ்ச்சியினைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்வதுடன் நல்வாழ்த்துக் கூறி வரவேற்கின்றோம்.

சரித்திரத்திற் கெட்டாக் காலங் கொட்டு யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் தென்னிந்தியதமிழ்நாட்டுச் சகோதரர்களுடன் அழிவற்ற கலாச்சார சமயத் தொடர்புகள் உடையோராய் வாழ்ந்து வருகின்றார்கள். யாழ்ப்பாணக் கவிஞர்களும் அறிஞர்களும், சமயம் இலக்கியம், நாடகம், மருத்துவம் ஆகிய துறைகளில் தமிழ் மொழியைப் பெருமையுடன் வளர்த்து வந்துள்ளார்கள். புகழ் பெற்ற சைவசமய புனருத்தாரண கர்த்தாவும், சமூக சீர்திருத்தவாதியும், மாபெரும் தமிழறிஞரும், இக்காலத் தமிழ் வசனநடையின் தந்தையும், சைவசமயத்தினதும் தமிழினதும் வளர்ச்சிக்காகத் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் பல நிலையங்களைத் தாபித்தவருமாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தோற்றிய நாடும் இந்நாடே இன்றும் யாழ்ப்பாணம் தமிழ்ப் பண்பாட்டிற்குத் தாயகமாகச் சிறப்புடன் விளங்குகின்றது.

அகில உலகமும், தங்களைத் தலைசிறந்த தத்துவ ஞானியாகவும், இந்தியாவின் இணையற்ற கலாச்சாரத் தூதனாகவும், மறுமலர்ச்சி பெற்ற இந்தியாவின் சிறந்த இராஜ தந்திரியாகவும் மதிக்கின்றது. தங்கள் ஆற்றலும் செயல்களும் இந்திய நாட்டின் பண்டைய அரசர்களில் ஒருவரும் தத்துவ ஞானியுமாகிய ஜனகரை எமக்கு நினைவூட்டுகின்றன. அரசியல் ஞானமும், ஆத்மீகப் பண்பும்பொருந்திய இராஜதந்திரமே இந்தியப் பாரம்பரியத்தின் இலட்சியமென்ற உண்மைக்குத் தாங்கள் ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றீர்கள்.

தற்கால விஞ்ஞான முடிபுகளையும், தத்துவஞானக் கருத்துக்களையுந் தழுவிய தங்கள விரிவுரைகளும், நூல்களும் இந்திய தத்துவ ஞானிகளினதும், அடியார்களினதும் கோட்பாடுகளையும் பேரின்ப அநுபூதியையும் நவீன உலகத்துக்குத் தெளிவுற விளக்குவனவாகும். இவை மாத்திரமன்றி சமய அனுபவத்தின் உறுதியில் தாங்கள் கொண்டுள்ள திடநம்பிக்கை நாஸ்திக வளர்ச்சிக்குத் தடையாகவும், சமய வளர்ச்சிக்கு அரணாகவும் விளங்குகின்றது.

தாங்கள் ஐக்கிய நாடுகளின் கல்வி. விஞ்ஞான கலாச்சாரச் சங்கத்தின் தலைவராக ஆற்றிய பணியின் மாண்பும், மாஸ்கோவில் இந்தியத் தூதராக ஆற்றிய சேவையும் உலக நாடுகளில் இந்தியாவின் கௌரவத்தை உயர்த்தியதுமன்றி, தங்களுக்கு இராஜ தந்திரஉலகில் அழியாப் புகழையும் ஈட்டித் தந்துள்ளன.

தாங்கள் கீழ் நாட்டைப் பற்றி மேல்நாட்டிற்கும், மேல்நாட்டைப்பற்றிக் கீழ் நாட்டிற்கும் விளக்கி உரைத்து வரும் பணியால் மாறுபட்ட நோக்கங்களை [illegible] பர நம்பிக்கையும் சமாதானமும் வளர்ந்து வருகின்றன. இப் பணியை இந்திய பஞ்சசீலக் கொள்கைக்கமைய இன்னும் பல ஆண்டு ஆற்றுதற்குத் தங்களுக்கு உடல் நலத்தையும நீண்ட ஆயுளையும் அருளுமாறு இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மாநகரசபை அளித்த உபசாரப் பத்திரத்துக்கு மறுமொழியாகப் பேசும்பொழுது கலாநிதி இராதாகிருஷ்ணன் அவர்கள் பழமைவாய்ந்த அழகான யாழ்ப்பாண நாட்டிற்கு முதன் முறையாகத் தான் வந்திருப்பதாகக் கூறி உபசாரப்பத்திரத்திலே இந்நாட்டின் சால்புப் பழமையைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதை வாசித்த பொழுது கிரேக்க பூர்வகால கதை ஒன்று ஞாபகத்துக்கு வந்ததாகச் சொன்னார். அக்கதை தேவதூதன் ஒருவன் மனித குலத்து மாதிலே காதல் கொண்டு அம் மாதுக்கு இறவா வரத்தை ஒலிம்பிய தேவர்களிடம் பெற்றுக் கொடுத்தாரென்றும் அம்மாது காலஞ் செல்லச்செல்ல நரை திரை மூப்பு எய்தியதன்றி இறவாது முதிர்ந்த வயதுக்குரிய அல்லல்களை அநுபவிக்கவேண்டி நிகழ்ந்ததென்றும் அந்நிலையிலே இறத்தல் மேலானது என்று எண்ணி இறக்கும் வரத்தைப் பெற முயன்றாளென்றும் சொல்கின்றது. இறவாவரம் பெற்ற பொழுது இறவாமை இன்ன தன்மையாயிருக்க வேண்டுமெனபதை அத்தேவதூதன் பெற்றுக் கொடுக்கத் தவறியமையே இக் கதையின் பொழிப்பாகும். இறவாமை என்ற தன்மையில் என்றும் இளமையாயிருக்கும் பண்பில்லையேல் அது பயனற்றதாகும் என்பதைச் சுட்டிக் காட்டிச் சால்பின் பழமை மட்டும் போதாது அது என்றும் இளமையா யிருத்தல் வேண்டும் என எடுத்துக் காட்டி அவ்வாறு இந்நாட்டின் சால்பு என்றென்றைக்கும் நின்று நிலவத்தக்கதாக இருக்கும் என்று தாம் நம்புவவாகவும் புகன்றார்.

மாநகர சபையிலே பெண் பிரதிநிதிகள் இல்லாமை பற்றிக் குறிப்பிட்டு யாழ்ப்பாண மக்களின் அரைப் பங்கினரின் பிரதிநிதிகள் இச்சபையிலில்லாமை இந்நிலைமையைக் காட்டுகின்றது என விகடார்த்தமாகக் கூறிவிட்டு மேலும் மேன்மை தங்கிய கலாநிதி அவர்கள் மனிதகுலம் ஒன்றாக வளர்ந்து வருதல் அத்தியாவசியம் என்றும் ஒற்றுமையுண்டாகி வேற்றுமை விலகுவதற்கு உழைப்பதே வாழும் சால்பின் தன்மை என்றும் பல எடுத்துக்காட்டுகளை உபநிடதத்திலிருந்து எடுத்துப் பேசினர்.

**காங்கேயன்றுறையில்**

யாழ்ப்பாணத்தி லிருந்து இந்தியாவுக்குத் திரும்பும் பொழுது காங்கேயன்றுறைப் பட்டின சங்கத்தார் கலாநிதி ச. இராதாகிருஷ்ணன் அவர்களை வரவேற்று வழியனுப்பினார்கள். பெருந்திரளான மக்கள் பலாலி விமான நிலையம் வரைக்கும் வாழ்த்துக் கூறினார்கள். விமான நிலையத்தில் மாகாண அதிபதி ஸ்ரீ. ம. ஸ்ரீகாந்தா, முன் அமைச்சராக விருந்த திரு சு. நடேசன் இன்னும் பலர் சமூகமாயிருந்து வாழ்த்தி வழியனுப்பினார்கள்.

## கொழும்பு விவேகானந்தசபை

—0—

கொழும்புவிவேகானந்த சபை மண்டபத்தில் தை மீ 22 உ (4—2—58) செவ்வாய்க்கிழமை தொடக்கம் மாசி 11 உ (22-2-58) சனிக்கிழமை வரையும் மாலை 6-30 தொடக்கம் 8-30 வரையில் வண்ணை சிவத்திரு. சி. எஸ். எஸ். மணிபாகவதர் அவர்களால் ஸ்ரீமத் சம்பூரண இராமாயணம் பக்கவாத்திய சகிதம் கதாப் பிரசங்கம் செய்யப்பெறும் என்று சபைக் காரியதரிசி அறியத்தருகின்றார்.

## சனநாயகத்தின் சிறப்பு

### சமமாகயாவரையும் மதிப்பதில்தங்கியுள்ளது

கொழும்பில்நடந்த பிரித்தானிய சமராச்சிய பிரதிநிதிகள் விருந்தொன்றில் கலாநிதி இராதாகிருஷ்ணன் அவர்கள் பேசும் போது சனநாயகத்தின் சிறப்பு மற்றவர்களை நீங்கள் நடத்தும் முறையில் தங்கியுள்ளது. எந்த விதமான சாதி சமய அரசியல் வேறுபாடுகளிருந்தபோதிலும் யாவரும் சமமாக மதிக்கப்படுதல் வேண்டும் மக்கள் தங்களுக்கிடையில் வேறுபாடு காட்டாத சம உரிமையுள்ள சமூகத்தை வளர்ப்பதாயுள்ளது சனநாயகம். பாரபட்சமும் நீதியீனமும் நீக்கப்பட்டுச் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் யாவருக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

பிரித்தானிய சமராச்சியத்தின் சிறப்பென்னவென்றால் அதிலுள்ள இராச்சியங்களை இணைப்பதிற் கட்டுப்பாடெதுவுமில்லாமலிருப்பதாகும். ஒழுங்குமுறையில்லை. அப்படியிருந்தும் அவை நன்கு இணைக்கப்பட்டுள்ளன. உலகம் முன்னேறுதற்குச் சாதி சமய நிற பேதமில்லாத சமூகமொன்றமைத்தல் வேண்டும். உள்நாட்டுக் கருமங்களிலும் வெளிநாட்டுத் தொடர்புகளிலும் இலங்கை மேற்கண்டவாறு முன்னேறுமென்று நம்புகிறேன் என்று கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சைவாணன் கோவை
சொக்கப்பநாவலர் உரை
பதிப்பாசிரியர்
பண்டிதமணி, வித்துவான் ஸ்ரீ ந. சுப்பையபிள்ளை அவர்கள்
அழகிய இரண்டாம் பதிப்பு
விலை ரூபா: 6/—

# இந்துசாதனக் கல்விக் கதிர்

இல. 10

சைவசமயம், கல்வி
இலக்கியம், கணித விஞ்ஞானம்

இந்துசாதன இளைஞர் பகுதியாகப்
பட்சந்தோறும் வெளிவருவது

ஆசிரியர்க்கும் ஆசிரிய மாணவர்க்கும் உரிய அரிய நூல்!
படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்
சைவத் திருவாளர் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை B. A. அவர்கள் இயற்றியது
புதுக்கிய இரண்டாம்பதிப்பு
விலை: ரூபா 3-00
அதிபர் "இந்துசாதனம்" யாழ்ப்பாணம்.

இந்திய உபசனாதிபதி

# தத்துவ ஞானப் பேராசிரியர் ஸேர். ச. இராதாகிருஷ்ணன்

—0—

## முன்னுரை

உலக நாகரிகத்துக்கு உறுதுணையாய உண்மைக் கொள்கைகளை அளித்ததும் அளித்து வருவதும், திருவருட் செல்வப் பரத நாடாகிய இந்தியாவே. ஞான நூல்களையும் பல துறைப்பட்ட கருவி நூல்களையும் உலகுக்களித்தது இந்தியாவேயாம்.

இந்தியாவின் தத்துவ ஞானத்தை உலகெலாம் போற்றுமாறு விளக்கி வருபவர், சர்வ கலாநிதியமாய் விளங்கும் ஸேர் ச. இராதாகிருஷ்ணன் ஆவர். இப்பேராசிரியர் ஈழமாநாட்டிற்கு விஜயஞ் செய்துள்ளார். வட இலங்கையாகிய யாழ்ப்பாணத்துக்கும் விஜயஞ்செய்து நந் தமிழ்நாட்டினையும் பெருமைப்படுத்தியுள்ளார்.

மெய்கண்டதேவர், சங்கரர், இராமானுஜர், மாத்துவர், நீலகண்டர் முதலியோரும், நாயன்மாரும், ஆழ்வாரும், இராமானுஜம், ஸேர். ஸி. வி. இராமன முதலிய கணித விஞ்ஞானக் கலைஞர்களும் பிறந்த தென்னாடே இராதா கிருஷ்ணனர் பிறந்த திருநாடாகும்.

இப்பெரியார் பிறந்த திருநகர் சென்னைக்கு வடமேற்கே நாற்பத்தைந்து கட்டை (மைல்) தூரத்திலுள்ள திருத்தணிகை. இத்திருத்தலத்திலே பழமை வாய்ந்த சிவன் கோவிலும், முருகன் திருக்கோவிலும் உண்டு. திருத்தணிகைப் புராணம் இதன் சிறப்பினை விரித்துக் கூறும். கந்தபுராணத்திலும்திருப்புகளிலும் திருத்தணிகையின் புகழ விளங்கக் காணலாம்.

முன்னை நாளிலே தமிழ் கூறு நல்லுலகத்தின்பாற்பட்டிருந்த தணிகைப்பதி விஜய நகர ஆட்சிக் காலத்தில (தமிழ்த்தாய் பெற்ற) தெலுங்குமொழி பயிலு நாடாயிற்று.

## பிறப்பு

வேதநெறி தழைத்தோங்கவேண்டும் என்னும் விருப்புடையவரும், ஒழுக்க நெறிநின்றவரும், நாட்டின் நன்மதிப்புப் பெற்றவரும் தெலுங்கினைத் தாய்மொழியாகவுடையவரும் ஆகிய அந்தணர் புரிந்த தவப்பயனை, இராதாகிருஷ்ணனர் 1888-ம் ஆண்டு ஒன்பதாந் திங்கள் ஐந்தாம் நாளிற் பிறந்தார்.

## இளமைப் பருவம்

ஒழுக்கநெறி வாய்ந்த இரு முதுகுரவராலும் பக்தி நெறியில வளர்ககப்பட்டு வந்த இராதாகிருஷ்ணனர் ஐந்தாம் ஆண்டில், திருத்தணிகையில் உள்ள கிறிஸ்த பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். சிறுபிராயம் முதல் விளையாட்டில் விருப்பமில்லாதவராகக் காணப்பட்டார். திருத்தணிகைக்கு முருகனடியார் கூட்டங் கூட்டமாகச் செல்லும், காட்சி இவர் உள்ளத்திற் படிந்து பக்தியையும புனித வாழ்க்கையினையும வளர்ப்பதாயிற்று.

பின்னர் சிலகாலம் தமிழ் நாட்டில் வடஎல்லையும், பெருமாள் திருத்தலமுமாகிய திருப்பதியிலே கல்வி பயின்றார்.

பன்னிரண்டு வயசு வரை திருப்பதியில் இருந்த இராதாகிருஷ்ணனருக்கு மேனும மேலும பக்தி உணர்ச்சியும் இந்து சமயப் பற்றும் வளர்வதாயிற்று. நாம் நமது சமய உண்மைகளை நன்கு அறிதல் வேண்டும் என்னும் எண்ணம் அவர் உளளத்தில் உண்டாயிறறு.

இராதா கிருஷ்ணனர் இளைஞராய் இருநதகாலமே சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் (சிகாகோவில்)நடந்த சர்வசமய மகாநாட்டிற்கு விஜயஞ்செய்து, இந்து சமயப் பெருமையினை நாட்டி, அமெரிகாவிலும் ஐரோப்பாவிலும் பிரசங்கமாரி பொழிந்த தவராச சிங்கமாய் விளங்கிய காலமாகும். ஆதலால் இந்துசமய அறிவினை உலகெலாம பரப்பவேண்டும் என்னும எண்ணம் அவர் உடத்து வளர்வதாயிறறு.

## சென்னையிற் கல்வி கற்றல்

பன்னிரண்டாம் பிராயத்தின் பின்னர், இராதாகிருஷ்ணனர் சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியிற் சேர்ந்து 1903-ம் ஆண்டில், சென்னைப் பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வில் (மட்றிக்குலேஷன் பரீட்சையில்) சிறப்புறத்தேறினர்; பின்னர் எப். ஏ. வகுப்பிற் பயின்ற காலத்தும் விளையாட்டில் விருப்பமில்லாதவராய் ஆங்கில இலக்கிய நூல்களையும், பெரியாரின் உபநியாசங்களையும் ஊன்றிப் படித்து வந்தார்; எப். ஏ. பரீட்சையில் முதல் வகுப்பிலே தோன்றினர்.

இராதாகிருஷ்ணனர், பி. ஏ. வகுப்பிலே சமய தத்துவத்தையே சிறப்புப் பாடமாகப் பயின்று சிறந்த தேர்ச்சி பெற்றார். அவர் மாணவராக இருந்தபொழுதே அவருக்குத் திருமணம் நிகழ்வதாயிற்று அவர் மனைவியார் 'மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந்துவப்ப ஊட்டும் நேசமிக் குடையாள் கொண்கண் குறிப்பறிந் தொழுகு நீராள்' என்பதற்கிலக்கியமாய் விளங்கினர். எம். ஏ. வகுப்பிற் பயின்ற காலத்திலேயே ஆங்கிலத்தில் அரிய விரிவுரைகள் செய்து பெயர் பெற்றார்; 1909 ம் ஆண்டு எம. ஏ. தேர்வில் முதல்வராகத் தேர்ச்சி பெற்று எல்லோரையும் இன்புறச் செய்தனர்.

— வரும்

முத்திசாதன முறை
இது
கர்மயோகம், பக்தியோகம், இராஜயோகம், ஞானயோகம் என்பனவற்றைத் தெளிவாக விளக்குவது
20 அத்தியாயம்,
264 பக்கம்.
விலை ரூபா 1/—
அதிபர்:
இந்துசாதனம்
யாழ்ப்பாணம்.

ஆண்டுப் பிறப்புடன்

# அமெரிக்கச் சந்திரன்

## "அகரச்சந்திரன்" ஆகாயத்திற் பறக்கின்றது

சென்றவெள்ளிக்கிழமை (இலங்கை நேரம்) இரவு 9-18 மணிக்கு அமெரிக்க விஞ்ஞானிகள் தங்கள் சந்திரனைப் பறக்க விட்டிருக்கின்றனர். சோவியத்து முதற் சந்திரன் விடப்பட்டு 18 வாரத்தின் பின் விடப்பட்ட அமெரிக்க சந்திரன், சோவியத்து இரண்டாம் சந்திரனுடன் தோழமை பூண்டு பூவலஞ் செய்கின்றது. இது, 'பியானோ' தருவதுபோன்ற இசையுடன் சுழல்கின்றது.

"1958 அல்பா" என்பதே அமெரிக்கர் இதற்கு இட்ட பெயர். 'அல்பா' என்பது கிரேக்க பாஷையின் முதலாவது எழுத்து, 1958-ம் ஆண்டில் எழுந்த முதற் சந்திரன் இதுவாதலின் இப்பெயர் இதற்கு இடப்படலாயிற்று. இதனை "அகரச்சந்திரன்" என்பது பொருத்தமுடைத்து.

அகரச் சந்திரன் மணிக்கு 19400 மைல் வேகத்தில் பூமியைச் சுற்றுகிறது. விடப்பட்டு 106 நிமிஷத்தில் பூமியை முதல்முறை சுற்றிவிட்டது; சுழல்கின்றது.

| | சோவியத்துச் சந்திரன் i | சோவியத்துச் சந்திரன் ii | அமெரிக்கச் சந்திரன் (அ) |
|---|---|---|---|
| நிறை | 184 இரு | 1118 இரு | 30 8 இரு |
| நீளம் | —— | —— | 80 இஞ்சு |
| விட்டம் | 22'8" | 15 அடி | — |
| ஆரம்பத் திகதி | 4-10-57 | 3-11-57 | 31-1-58 |
| மணிக்கு மைல் | 1800 | 17840 | 19400 |

# இந்துசாதன இளைஞர் கழகம்

இளைஞர்களே,

திருநாட்களுள் ஒன்றாகிய தைப்பூச நாளிலன்று நீங்கள் கோயிலுக்குச் சென்று வழிபட்டிருப்பீர்கள். இளைஞர் கழக உறுப்பினராயுள்ள பலர் கட்டுரைகள் எழுதி அனுப்புகின்றீர்கள் மிகவும் சந்தோஷப்படுகின்றோம் சில கட்டுரைகளில் ழகர ளகரப் பிழைகள் காணப்படுகின்றன. கட்டுரை அனுப்புமுன் தமிழ் அகராதியைப் பார்த்துத் திருத்திப் பழகுதல் நன்று. ழகர, ளகர வரியிலுள்ள எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்கப் பழகினால் இப்பிழைகள் ஏற்படா. தென்னிந்தியச் சிறுவர் சிறுமியர் இவ்வகையான பிழைகள் விடுவது குறைவு. அவர்கள் றகர ரகரப் பிழைகள் விடுகிறார்கள். தமிழ்ச் சிறுவர் சிறுமியர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய நாலாம் பாலபாடத்தைப் பலமுறை வாசித்தல் நலம். அதனை வாசிப்பதனல் தமிழ் அறிவும், சைவ அறிவும் வளரும். நாவலர் நடையும் வரும். வலி, வளி, வழி, கிளி, கிழி, வாழை, வாளை, களி, கழி, குரங்கு, குறங்கு, மரம், மறம், பணி, பனி என்னும் சொற்களின் பொருளை அறியுங்கள்.

"சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்" என்றார் ஔவையார். "கல்விக்கழகு கசடற மொழிதல்" என்றார் கொற்கை வேந்தனர் தமிழை நன்கு பேசப் பழகினல், பிழையின்றி எழுதும் ஆற்றல் பெறுவீர்கள்.

7—2—58. இ. இ. க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரவன் ஆற்றல்

கலேஞர் திருவாளர் எஸ். சுப்புரெட்டியார் M. A; B. Sc. L. T அவர்கள் 'தமிழ்நாடு' என்னும் தினவர்த்தமானியில் எழுதிய கட்டுரை விஞ்ஞான பாடம் பயிலுவோர்க்குப் பயன்படுமாறு தரப்படுகின்றது. "விறகிற் றீயினன்" என்னும் விஞ்ஞான உண்மையினை விளக்குவது.

( முற்றொடர் )

## உறைந்த ஆற்றல்

கதிரவனிடமிருந்து ஆற்றல் தவாரங்களின் ஒவ்வோர் அணுவிலும் அடங்கிக்கிடக்கின்றது என்பதை மேலே கண்டோம். இந்த ஆற்றல்தான் பூமியிலிருந்து கிடைக்கும் நிலக்கரியிலும் மண்ணெண்ணெய் போன்ற திரவ எரியைகளும் (liquid fuels) அடங்கிக் கிடக்கின்றது. நிலக் கரி என்பதுஎன்ன? பண்டைக் காலத்திலிருந்த காடுகள் தாம் காலப் போக்கில் நிலத்தினுள் அழுந்தி உருமாறின. அவற்றைத்தான் நாம் நிலக்கரி என்று வெட்டி எடுக்கின்றோம். திரவ எரியைகள் யாவும் இப் பழைய மரங்களின் சாறுகளேயாகும். கதிரவன் ஆற்றலையுண்ட மரங்கள் யாவும் இவ்வாறு கரியாய் திரவ எரியைகளாய் மாறிய பின்னரும் அந்தப் பழைய பகலவன் ஆற்றல் அவற்றினுள்ளே அடங்கிக் கிடக்கின்றது. உன்னிப் பார்த்தால் இந்த ஆற்றல் ஒன்பது கோடி மைலுக்கப்பாலுள்ள கதிரவனிடமிருந்து வருகின்றது. காலத்தைக் கணக்கிட்டால் ஒன்பது கோடி ஆண்டுகளுக்கு முன் இருந்து வருகிறது என்பதை அறிகின்றோம். இங்ஙனம் காலத்தாலும் இடத்தாலும் சேய்மையிலிருந்து வரும் ஆற்றல்தான் இன்று நம் எதிரே எரிந்து வெப்பமாகவும் ஒளியாகவும் வெளியாவது வியப்பேயன்றோ? ஆற்றலோ உலகில் அழிவதும் இல்லை. புதிதாக ஆவதும் இல்லை. அது மாறி மாறிப் போய்க் கொண்டேயிருக்கும். இது இயற்கையின் நியதி. ஆதலின் மரத்தின் உள்ளே அன்று புகுந்த ஆற்றல் அங்கேயே உறைந்து கிடக்கின்றது. இவ்வாறு உறைந்து கிடக்கும் ஆற்றல்தான் நம்உடலிலோவெளியிலோ எரிதல் நிகழும்பொழுது உருகி வழிகிறது. நாம் மீண்டும் சூட்டையும் பெறுகின்றோம். ஒளியையும் அடைகின்றோம்.

## ஆற்றலின் மூலம்

மேற்கூறியவற்றால் கதிரவனே ஆற்றல்கள் அனைத்திற்கும் இறுதிமூலம் (the sun is the ultimate source of energy) என்பதை நாம் அறிகின்றோம்; அறிவியல் ஆராய்ச்சியால் இவ் வுண்மை இன்னும் தெளிவாகப்புலனுகின்றது. தாவரங்களின் ஒளிச்சேர்க்கையால்தான் பல்வேறு ஆற்றல் பொருள்கள் தோன்றுகின்றன என்பதையும் அறிகின்றோம். கதிரவன்தான் இவ்வுலக வாழ்க்கைக்கு உயிர் நாடியாக அமைகின்ருன். இந்த அறிவியல் உண்மைகளை அனுபவ இயலாகக் கண்ட இளங்கோ அடிகள்,

"ஞாயிறு போற்றுதும்
ஞாயிறு போற்றுதும்,
காவிரி நாடன் திகிரிபோல்
பொற்கோட்டு
மேரு வலந்திரிதலான்"

என்று தான் இயற்றிய காவியத்தில் மங்கல வாழ்த்துப் பாடலாக வெளியிட்டார். கை புனைந்தியற்ருக் கவின்பெறு வனப்பில் ஊறித் திளைத்த நக்கீரர் பெருமானும்,

'உலகம் உவப்பவலனேர்பு
திரிதரு
பலர்புகழ் ஞாயிறு'

என்று தம் திருமுருகாற்றுப்படையைத் தொடங்குகிருர். உலகத்திலுள்ள பல்லுயிர்களும் மகிழ, யாவர்க்கும் நேராகச் சுழலும் தனது ஒளியால் காட்சியின் பயன் கொள்வார் பலரும் புகழும் ஞாயிறு என்பது இதன் பொருள். "உலகம்" என்பது சீவான்மாக்களை உணர்த்துகிறது. 'பலர்' என்பது எல்லாச் சமயத்தினரையும் குறிக்கின்றது.

## ஞாயிறு வழிபாடு

இனி சமயக் கருத்துக்களும் கதிரவனை அடிப்படையாகக்கொண்டு எழுந்திருப்பதை ஒருவாறு நோக்குவோம். இயற்கை முறையில்அமைந்தஞாயிறு வழிபாடும் தமிழர்களால் பண்டிருந்தே மேற்கொள்ளப்பெற்று வருவது. தமிழிலுள்ள சமய நூல்களும் அருள் நூல்களும் ஞாயிறு வழிபாட்டைப்பற்றிப் பேசுகின்றன. இறைவனை நிலம் நீர், நெருப்பு, காற்று, வெளி, திங்கள் ஞாயிறு உயிர் என்ற எட்டு வடிவங்களாகப் போற்றும் வழிபாடும் ஞாயிறு வழிபாட்டில் அடங்கிவிடும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். ஞாயிறுவழிபாட்டில்ஏனைய வழிபாடு யாவும் ஒடுங்கிவிடும் என்பது அவர்கள கருத்து ஞாயிறு வழிபாடு வளரவளர உள்ளத்துடன் ஒளிரும் ஒரு பேரொளி கிளர்ந்தெழுதற்கு வழி ஏற்படும். ஞாயிற்ருெழியும் உள்ளொளியும் ஒன்றுபடப்பட நாம் தன்னெளி என்னும் ஒன்றில் மூழ்கும் பேறு பெறுகின்றோம். இதுவே அறிஞர்கள்கூறும் தன் வழிபாடு அல்லது உயிர் வழிபாடு என்பது இவ்வழிபாட்டின் முதிர்ச்சி எல்லாவற்றிற்கும் அடிப்படையாக உள்ள ஆண்டவனை உணரும் பெருநிலைக்குக் கொண்டு செலுத்தும்.

---

## யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

———————:0:———————

### பரீட்சைப் பேறு — 1957

1 தமிழ்ப் பண்டித பரீட்சை. பகுதி 1. பிரிவு 3
ப 1-57 த. மார்க்கண்டு.

2 தமிழ்ப்பாலபண்டித பரீட்சை — பிரிவு 3
பா 14-57 வே. நடராசா
நான சித்தி.
பா 35-57 இ. கனகமணி — நாலாம் பாடவகை,
பா 42-57 ச. ஆறுமுகம் முதலாம் பாடவகை.

3 சம்ஸ்கிருத பாலபண்டித பரீட்சை பிரிவு - 3
ச. பா. 1-57 சீ. சிவகாமி

4 தமிழ்ப் பிரவேச பரீட்சை. பிரிவு 2
பி 60-57 வி கனகமணி, பி 80-57 ந. ஞானலட்சுமி பி 117-57 ச. மங்கையர்க்கரசி.

பிரிவு - 3

பி 18-57 தா. தங்கவடிவேலு, பி 19-57 சி. சிவசுப்பிரமணியம் பி 32-57 செ. சபாரத்தினம் பி 34-57 ச. திருநாவுக்கரசு, பி 35-57 ம குலவீரசிங்கம் பி38-57 நா. விசயமூர்த்தி, பி 39-57 ச. மகாலிங்கம், பி 52-57 க. பாலகிட்டிணர், பி. 69-57 நா. திருத்தணிகை பி. 74-57 சி. தவமணி, பி 85-57 இ. சிவபாக்கியம், பி 87-57 க. பாக்கியம், பி 89-57 க. தவமணி, பி 91-57 க. செல்லம்மா பி 92-57 கா. நவரத்தினமணி, பி 94-57 மு. யோகாம்பிகை, பி. 99-57 த. தங்கம்மா, பி 100-57 மு. பத்தினிப்பிள்ளை, பி. 101-57 பொ. பராசத்தி, பி 103-57 க. இராசம்மா, பி 105-57 மு. பார்வதி பி 107-57 சி புவனேஸ்வரி, பி 108-57 செ. இரத்தினம், பி 111-57 சி. தா. புவனசிங்கம், பி 118-57 ச. புனிதவதி.

நானசித்தி (அ) இரண்டாம் பாடவகை

பி 10-57 க சிவபாக்கியம் பி 55-57 கோ. பாலசுப்பிரமணியம், பி 62-57 பொ. தங்கமுத்து, பி. 76-57 நா. நாகம்மா பி. 79-57 தி. புவனேஸ்வரி, பி 81-57 சி. மகேஸ்வரி, பி 88-57 ம. அல்லிமலர்.

(ஆ) மூன்ரும்பாடவகை. பி 8-57 வா. தங்கமுத்து
(இ) நாலாம பாடவகை. பி 21-57 த. கணேசபிள்ளை.

---


சைவபரிபாலனசபை வெளியீடு

கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்

## தேர்வுக்குரிய நூல்கள்

[ G. C. E. ]

இலக்கியம்

கும்பகருணன் வதைப்படலம் (செய்யுள் 1—170)
உரையாசிரியர் : வித்துவான், பண்டிதர் சைவப்புலவர் க. வேந்தனர் அவர்கள். விளக்கவுரை, தேர்வுவினக்கள் முதலியவற்றுடன். விலை ரூபா 3-00

சைவ சமயம

பதிப்பாசிரியர்: பண்டிதர் ம, வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

திருவருட்பயன் விளக்கவுரையுடன்
உரை ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் B. A.
விலை சதம் —.75.

திருக்குறள் மூலமும் உரையும் (25 — 34)
ஆங்கில மொழிபெயர்ப்புடன் விலை சதம்—75

சமயகுரவர் சந்தானகுரவர் சரித்திரச் சுருக்கம் ,, ,, —75

தேவார திருவாசகத்திரட்டு உரையுடன் விலை சதம்—65


---

## விண்ணப்பப் பத்திரம்

### 'இந்துசாதன இளைஞர் கழகம்'

இந்துசாதனக் காரியாலயம்
யாழ்ப்பாணம்

அன்பு கூர்ந்து என்னை 'இந்துசாதன இளைஞர் கழகத்திற் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

முழுப்பெயர் ............................................................
வகுப்பு ........பிறந்த திகதி..............................
விலாசம் ............................................................
............................................................
கையெழுத்து ............................................................
திகதி ............................................................
தந்தையாரின் /
ஆசிரியரின் கையெழுத்து

---

## அகிம்சை மூர்த்தி அண்ணல் காந்தி

மண்ணாசை, பொன்னாசை போன்றவற்றால் மக்கள் போராடும் பொழுது அவதரித்தார். அகிம்சை மூர்த்தி அண்ணல் காந்தி. பிறந்தார் ஓரிடத்தில், படித்தார் ஓரிடத்தில், தொண்டு செய்தார் பாரெங்கும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற முதுமொழிக்கு இணங்க, சாதி பேதமில்லாது எல்லோரும் சமானம் என்ற கொள்கையை மனத்திற் கொண்டு பாரத மீட்சிப்போரில் ஈடுபட்டார். மற்ருேர் என்ன சொன்னலும், நான் மக்களின் நலனுக்காகவே எனது வாழ்வைத் தியாகஞ் சேய்வேன். என்ற உயர்ந்த கொள்கையுடன் வாழ்ந்தவரே அண்ணல் காந்தி. அன்னர் உண்மையையே கடவுளாகக் கொண்டார். தீங்கு செய்யாது இருப்பதையே சமய நெறியாகக் கொண்டார். தனது கடன் உலக பணிசெய்து கிடப்பதே யென்ற கொள்கையுடன், உலகப் போராட்டங்களின் நடுவே நின்று வாய்மையென்னும் இறைவனை வழிபட்டு இன்ஞசெய்யாது அஹிம்சைப் போராட்டத்தை நடத்தினர். அவர் தன்னலங் கருதாது தான் கொண்ட கொள்கையே மேல் என்று கருதிப் போராடினர்.

இப்போராட்ட நேரங்களில் காந்திமகான் மக்களின் புகழ்ச்சிகண்டு மகிழவில்லை; அவர்கள் கூறும் குறைகண்டு வெகுளவுமில்லை. தான் கொண்ட குறிகோளையே மேலாகக் கொண்டு போராடியதால் அன்ருே இன்று பாரதம் சுதந்திரம் அடைந்த நாடாகத் திகழ்கின்றது.

காந்திமகான் சொல்லெல்லாம் செயலிற் காட்டினுர் அவர் இறக்கும் பொழுதும் தன்னைச் சுட்டவனை மன்னித்து உயிரைக் காப்பாற்றுங்கள் என்று சொல்லி உயிர் நீத்தார். இறக்கும்பொழுதும் அகிம்சை மூர்த்தியாக விளங்கினுர். சத்தியம் தவருது நல்வழியைப் புகட்டிய உத்தமர் காந்தியை நாமும் பின்பிற்றுவோம்.

வாழ்க! காந்தி புகழ்

செல்வன்
சு. லோகதாசன் (9)

---


## புத்தக விளம்பரம்

கட்டுரைக் களஞ்சியம்
விலை ரூபா 1-50

சிறுபிள்ளைப்பாடம்
விலை சதம் 40


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயர்கள் நெஞ்சம்

# வடபகுதித் துறைமுகங்கள் பயன்படுத்தப்பட முடியாதா?

—————:0:—————

இலங்கைசுதந்திரம்பெற்று ஆண்டுகள் பத்துப் பூர்த்தி ஆகின்றன. 'ஐக்கிய தேசிய ஆட்சி' 'மக்கள் முன்னணி ஆட்சி' என்று, புதுப் புது ஆட்சிக் காலத்தினையும் பல பிரதமர்களையும் ஈழம வாழ் மக்கள் கண்டு அநுபவித்திருக்கின்றார்கள். இனத்தாலும மொழியாலும் ஒன்றுபட்டு ஒருமித்து வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலே யுள்ள தமிழ் மக்கள் இற்றைவரையில் ஆளப்படும் இனத்தினராகவே கருதப்பட்டு வந்துள்ளார்கள். ஆட்சிப் பொறுப்பைக் கையேற்ற அரசியற் கட்சிகளனைத்தும் தமிழ்ப்பகுதி மக்களது நியாயமான வேண்டுகோள்களைத் தட்டிக் கழித்து வந்துள்ளன.

**வடபகுதி மக்களின் ஆசை......?**

இன்று, இலங்கையில் "மக்கள்-ஐக்கிய-முன்னணி" ஆட்சி நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. உண்மையில் மக்களது ஐக்கியத்தைப் பெற்ற முன்னணி ஆட்சியாகப் புலப்படவில்லை. தமிழக மக்கள் முன்னுள்ள மூலாதாரப் பிரச்சினைகளோ சொல்லுந் தரத்திலில்லை. பெயரளவில் ம. ஐ மு ஆட்சி தான்! நாட்டின் தலைமைப் பொறுப்பு மாறினால் — தேவைகள் பூர்த்தியுறும்-தேசிய முன்னேற்றம் வளரும் என்று எண்ணிய அரசியல் அவதானிகள் ஏமாற்றமுற்றனர். வடபகுதி மக்கள் ஏதாவது ஒரு துறைமுகமாவது திறபடுமா என ஆவலுறுகின்றார்கள்.

**நியாயமான அளவு எங்கே?**

வட பகுதித் துறைமுகங்களில் நிரந்தரமான கப்பற் போக்குவரத்துஏற்படவேண்டும் என்பது வடபகுதி மக்களைப் பொறுத்தவரையில் இன்று நேற்றெழுந்த வேண்டுகோளல்ல! இது இப்படி இருக்க, கொழும்புத் துறைமுகத்திலே அடிக்கடிஏற்பட்டு வரும் எதிர்பாராத வேலை நிறுத்தங்களாலும், வேண்டுகோள்களாலும் ஈழத்துக்குப் பொருள் பண்டங்களை ஏற்றிக்கொண்டு வரும் பிறநாட்டுக் கப்பல்கள் வாரக்கணக்கிலே தங்கவேண்டிய சந்தர்ப்பம் அடிக்கடி ஏற்படுவதாகவும், சில கப்பல்கள் சில சந்தர்ப்பங்களிலே துறைமுக நெருக்கடி காரணமாக ஏற்றி வந்த பொருட்களை இறக்க வசதிகளின்றி, தங்கள் தங்கள் நாடுகளுக்கு மீண்டுவிடுவதாகவும் செய்திகள்வருவதுண்டு

**வெள்ளப்போதும் வேண்டுதல் ... ... ...!**

சமீபத்திலே இயற்கை அன்னையின் சீற்றத்தினால் ஏற்பட்ட கொடிய வெள்ளப் பெருக்கின்போதும் வடபகுதி மக்கள் பொருள் பண்டங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள் புகைவண்டிப் பிரயாணம் தடைப்பட்ட போது வடபகுதிக்குக் கப்பல்மூலம் பொருள் பண்டங்களை உடன் அனுப்பும்படியும் வடபகுதித் துறைமுகத்தை நிரந்தரமாக உபயோகிக்க வேண்டுமென்றும், யாழ்ப்பாணம் வந்த பிரதமர் பண்டாரநாயகவுக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் விண்ணப்பஞ் செய்தார்களே! வேண்டுதல் விடுத்தார்களே! தமிழ்ப் பிரதிநிதிகளின் இந்த யோசனை பற்றி பிரதமர் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்தார்? தமிழ்ப் பெருங்குடி மக்களின் உள்ளத்தில் பல ஆண்டுகளாக எழுந்து, வாட்டும் இந்த உரிமை வேண்டுகோளை 'நியாயமான அளவு' தமிழருக்கு நீதி வழங்கும் நியாயமான அளவு பண்பு படைத்த பிரதமர் பண்டாரநாயக தீர்த்து வைப்பாரா? 'ஒற்றையாட்சித் திட்டத்தின் கீழ் தமிழன் ஒருபோதும் விமோசனம் அடைய மாட்டான் — தமிழ்ப் பகுதிகள் வேண்டுமென்று புறக்கணிக்கப்படுகின்றன" என்பனவாகிய தீராத பழிச் சொல்லினை மாற்ற ஈழத்துப் பிரதமர் எத்தகு நடவடிக்கை எடுக்கப் போகிறார்?

**நல்லெண்ணத்தை வளர்க்க வேண்டும்**

ஒப்பந்தம ஏற்பட்டுவிட்டது, தமிழ் மக்கள் இலங்கையில் உரிமை - அந்தஸ்து என்பனவற்றால் எவ்விதமும் பாதிக்கப்படாது, சிங்கள மக்களும் தமிழ் மக்களும் சேர்ந்து இலங்கையின் செல்வத்தை வளர்க்கப் பாடுபட்டு உழைக்க வேண்டும் என்னும் பரந்த நோக்கம் இலங்கை வாழ் மக்களுக்கு எந்த ஆண்டில் உருவாகப் போகிறது? நியாயமான வேண்டுகோள்களை எவ்வளவு காலத்துக்குக் கவனிக்காமல் விடலாம்? அரசியல் வாதிகளின் எதிர்ப்பை வளர்க்கும் மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி — அத்துடன், தமிழ் பேசும் மக்களுடைய நல்லெண்ணத்தையும் (விபரீதச் செய்கைகளால்) இழக்கச் செய்வது வருத்தத்துக்குரியதாகும. வட பகுதித் துறைமுகம் நிரந்தரமான உபயோகத்துக்குப் பயன்படுத்த மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி வழி வகுக்கவில்லையென்றால் பின் எந்த ஆட்சிக்காலத்தில் நடைபெற முடியும? தமிழ் மக்களின் இந்தப் பிரச்சினையை எந்தப் பிரதமர் தீர்த்து வைக்கப்போகின்றார்? வடபகுதித் துறைமுகங்களில் ஒன்றையாவது உடன் திறந்து நிரந்தரமாக உபயோகியுங்கள் என்பது 'நியாயமான அளவுக்கு' அப்பாற்பட்ட கோரிக்கையா? வடபகுதிக்குக் கப்பல்கள் வந்தால் இங்குள்ள ஏழைத் தொழிலாளர்களும் வயிறு வளர்க்க வழியாகுமன்றோ?

**அரசியற் கட்சிகளின் பொறுப்பு**

தமிழ்ப் பகுதிகளி லுள்ள துறைமுகங்கள் என்றால் - அவற்றை உபயோ[illegible]துதற்கு சிங்கள ஆட்சி[illegible]களுக்குச் சித்தம் எழாது என்று வடபகுதி மக்கள் கூறுவதை உணர்ந்து காலங் கடத்தாது ஆவன செய்வார்களா? ஆட்சியாளர்களுக்கு இக் கருத்தை உணர்த்த பொதுவுடைமை வாதிகள் - சமசமாச வாதிகள் தயங்குவதேனோ? வடபகுதித்துறைமுக உபயோகம்பற்றி எண்ணுவது வகுப்புவாதக் கூச்சல் என்று எண்ணப்படுமா? பிளவுபட்ட இலங்கையை உருவாக்கவிரும்பமாட்டோம் என்று கதறும் சண்ணியம் மிக்க அரசியல் தலைவர்கள் இத்தகைய பிரச்சினைகளில் பரந்த நோக்கோடு 'நியாயமான அளவு' நீதிக்கு இடமளித்துக் கருமம் ஆற்றுவார்களா? மக்கள் மன்றத்தில் வடபகுதித் துறைமுகப் பேச்சுக் கிளப்பப்படுமா...?

கா. இரகுநாதன்
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம், 2-2-58.

## முற்றவெளியிற் சொற்பெருக்கு

—————:0:—————

### மாபெரும் மக்கள் கூட்டத்தில் மதஉணர்ச்சியின் குறிக்கோள் விளக்கம்

————0————

தமிழ்ச்சால்பு மணங் கமழும் வரவேற்பு யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தில் கலாநிதி இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. தலைமை வகித்த திரு. சி. குமாரசுவாமி அவர்கள் யாழ்ப்பாண மக்கள் மனமகிழ்ச்சியுடன்வரவேற்கும் மாபெருந் தலைவர் கலாநிதி இராதாகிருஷ்ணன் மனிதகுலத்தின் மாணிக்கமாக மாநிலத்தில் அறிவு ஒளி பரப்புகின்றார் எனக் கூறி, கலாநிதியவர்களைச் சொற் பெருக்குமாறு வணக்கமாக அழைத்தார்.

சமயங்கள் பலவுள அவை யாவும் விளக்குவன உண்மைகளையே. சமயவுணர்ச்சியுடையவன் மறுமலர்ச்சியடைந்தவனாக இருப்பதே சமயத்தின் மகத்துவத்தைக் காட்டும். நூலறிவினால் சமயவுணர்ச்சி தோற்ற மாட்டாது. அறிவை அனுபவித்தல் வேண்டும். சிதம்பர இரகசியம் என்று சொல்லப்படுவது இறைவன் என்பது அறிந்து கொள்ளமுடியாத உண்மை என்று புலப்படுத்துவதாகும்.

முன்னேற்றமான அறிவுணர்ச்சியினால் இறைநிலைமை என்ன என்று உணர்தல் வேண்டும். அதற்கு ஒழுக்க நிலை வேண்டும். யான் எனது என்பன அற்று யாவரும் கேளிர் என்ற உணர்ச்சி உண்டாதல் வேண்டும்.

(அடுத்தஇதழில் விரியும்.)

—0—

**யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச்சங்கம் லிமிற்ரெட்**
இல: 4, கண்டிரேட், சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.
பதிவு இல. M. 110

## அந்தியகால அறிவித்தல்

இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் அங்கத்தவர் தேகவியோகமடைந்தமையால் அன்னவர்க்காகச் செலுத்தவேண்டிய நன்கொடைப் பணத்தைத் தேகவியோகமடைந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குட் செலுத்தி விடவும். தவறின் பிரமாணம் 2 (2) ன் படி உரிமையை யிழககவேண்டி வரும்.

| காலகதியடைந்தவர் இலக். | பெயர் | விலாசம் | திகதி |
|---|---|---|---|
| 2076 | சி. அன்னம்மா | நல்லூர் தெற்கு | 31-1-58 |

மேலும் 834-ம் இலக்க அங்கத்தவரின் சாட்டுதலாளருக்கு ரூபா 1472-62 சதம்.
ரூபா 18-50 சந்தாப் பணமும் கொடுக்கப்பட்டது.

இங்ஙனம்,
த. இராசரத்தினம்
கௌரவகாரியதரிசி, 31-1-58.

M218 7-2-58

### சைவ பரிபாலன வித்தியாலயம்

—0—

வியாவில் — காரைநகர்

இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பெற்ற எமது பாடசாலையின் மணிவாசகர் மண்டபம் பெருமழை காரணமாக விழும் நிலையில் இருந்தமையால் அது புதுப்பிக்கப்பெற்றுச் சென்ற 29-1-58 புதன்கிழமை மாலை குருகுல வித்தியாலய அதிபர் உயர் திரு. பொ. நவரத்தினம அவர்கள் விளக்கேற்றித் திறந்து வைத்துச் சிவபுராணம் ஓதினர். அதன்மேல் பூசை ஆராதனைகள் நடைபெற்றன. பின்பு திரு. பொ. நவரத்தினம் அவர்கள் மாணிக்கவாசக சுவாமிகளின் திவ்விய சரிதையை யாவரும் கேட்டின்புறும் வண்ணம் பிரசங்கம் செய்தார். அத்துடன் இவ் வித்தியாலயம் மேன் மேலும் வளர்ச்சியடையும் வண்ணம் சமுகமளித்திருந்த அனைவரும் வாழ்த்தினர்.

—கடிதம்.

## ஆன்மார்த்த அடிப்படையிலே உலகச் சிக்கல்கள் நீக்கப்படலாம்

**ஹொறணையில் இராதாகிருஷ்ணன்**

முதல் மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக தலைமையில் ஹொறணையில் ஸ்ரீ பாலி தர்மநிதிச் சொற்பொழிவாற்றுபோது கலாநிதி இராதாகிருஷ்ணன் அவர்கள், இந்நாட்டவருக்கின்று இன்றியமையாது வேண்டப்படும் சில ஆழ்ந்த அறிவுரைகளைக் கூறியுள்ளார்.

எங்கள் யாவருக்கும் பொதுவாயுள்ள அறைகூவல் ஆயுதப்பெருக்கம் செய்யவேண்டுமென்பதல்ல, அறியாமை, உணர்ச்சி வேகம், வெறுப்பு பேராசை ஆகியவற்றை நீக்குவதேயாகும இக்கால உலகத்தின் சிக்கல்களை. உயிர் வாழ்க்கையின் ஆன்மார்த்தத்தை அடிப்படையாக வைத்தே நீக்குதல் முடியும். எம் வாழ்க்கையை நோக்கும் போது நாங்கள் யாவரும் ஓர் யாத்திரையிற் செல்வோரா[illegible] நாங்களே காரணராயிருக்கின்றோமென்று புத்தர் கூறியிருக்கின்றார். நாங்கள் இப்பொழுது எது செய்கின்றோமோ அதுவே எங்கள் எதிர்காலத்தை நிச்சயிப்பதாயிருக்கின்றது என்று அவர் பேசும்போது கூறினார்.

## இந்திய தலைவருக்கு இணையற்ற வரவேற்பு

————0:————

### அன்பு கனிந்த பல புகழ் மாலைகள்

இந்திய உபசனாதிபதி கலாநிதி எஸ் இராதாகிருஷ்ணன் அவர்களை வரவேற்பதற்குப் பலாலி விமான நிலையத்தில் யாரும் என்றும் காணாத ஒப்புயர்வற்ற சிறந்த வரவேற்பொழுங்குகள் செய்யப்பெற்றிருந்தன. வாழை மரங்கள் நிறுத்தப்பெற்று மலர்மாலைகளாலும் மகர தோரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்ற காட்சி அருள் ததும்பும் தன்மைத்தான ஓர் சூழ்நிலையை உண்டாக்கி விளங்கியது. எம் மதிக்குவரும் பெரியாரின் அகச்சிறப்பு அத்தன்மைத் தென்பதைக் காட்டுவதாயமைந்தது அங்கே காணக்கிடந்த புறக்காட்சி என்பது பொருத்தமாகும்.

பெரியார் ஸ்ரீ. சி. குமாரசுவாமி அவர்களுடன் வடமாகாண அரசாங்க அதிபர் ஸ்ரீ ம. ஸ்ரீகாந்தா, ஸ்ரீ. சு. நடேசபிள்ளை, வித்தியாதிகாரி ஸ்ரீ. எஸ். யு. சோமசேகரம், யாழ்ப்பாண நகரசபைத் தலைவர் ஸ்ரீ பி. காசிப்பிள்ளை முதலிய பல பெருமக்கள் குழுமி நின்று மங்கல வாத்தியம் முழங்க அப் பெரியாரை வரவேற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரியமும் தமிழும் ஒன்றேடொன்று தொடர்புடையன

—0—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போது பெற்று வளருகின்றது. அது பண்டைய இலக்கண சம்மதம். அகத்தியர் ஆரியருமாம் தமிழருமாம். சங்கத்துப் புலவர்கள் அப்படிப்பட்டவர்களே. எவனும் ஆரியனும் ஆகலாம்; தமிழனுமாகலாம். வடக்கு, அறிவுவிருத்திக்கும் தெற்கு அன்புச் சாதகத்திற்கும் வாய்ப்பானவை. ஸ்ரீ ராமன் அன்பைச் சாதிக்கத் தெற்கே வந்தான். கலி வளர வளர ஆரியமுந் தமிழும் தளர்ந்தன. சரித்திரகாரர் ஆரியர் வேறு தமிழர் வேறு என்று ஒரு சாதியுத்தத்தைக் கிளப்பி விட்டார்கள். மகாபாரத யுத்தம் தோன்றியிருக்கிறது.

வித்தியா தரிசியாயிருந்து இளைப்பாறியவரும், சங்கக் காரியதரிசியுமான திரு. எஸ். தியாகராசா அவர்கள் தாய்மொழியாம் தம்மொழியில் பற்றுள்ளவர்கள் முக்கியமாக இச் சங்கத்தின் மூலம் நலனடைந்தவர்கள் இதன் முன்னேற்றத்திற்கு உழைக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திரு. கே.எஸ். அருணந்தி அவர்கள் உளநூல் சம்பந்தமான சொற்பொழிவொன்றை நிகழ்த்துகையில் தற்கால மேலைத்தேச மனோதத்துவ சாத்திரம் மனிதனின் இலௌகீகவாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாக அபிவிருத்தியுற்று வருகிறதென்று குறிப்பிட்டார்.

## சுதந்திர தினம் தமிழரின் துக்க தினம்

———

இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் பல பகுதிகளில் சுதந்திர தினம் துக்க தினமாகவே கொண்டாடப்பட்டது. பிற வேறுபாடுகளிருந்தபோதிலும் தமிழரசுக் கட்சியும் தமிழர் மகாநாடும் இத்தொடர்பிற் கருத்தொற்றுமை யுடையவையாயிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. யாழ்ப்பாண நகரமண்டபத்திலும்கடைகள்வீதிகளிலும் யந்திரவண்டிகளிலும்கறுப்புக் கொடிகள் பலவிடங்களிலும் பறந்துகொண்டிருந்தன.

தலைவர். திரு. நடேசபிள்ளை அவர்கள் தமது முடிவுரையில் சங்கத்தின் கடந்தகால சேவைகளைப் பாராட்டினர்.

புதிய நிர்வாகிகள்

போஷகர்: கல்வி அமைச்சர். நிர்வாகத் தலைவர் பிரதம பெரும்பகுதி வித்தியாதரிசி.

உபதலைவர்கள்: திரு எஸ். நடேசன், திரு எஸ் யு சோமசேகரம் வழக்கறிஞர் வி. நாகலிங்கம்.

காரியதரிசி: செல்வி ஆர். எஸ். மதியாபரணம்.

தனாதிகாரி: திரு. ஏ. சரவணமுத்து.

பிரேரணை

பண்டித பரீட்சையில் சித்திபெற்றவர்களைப்பட்டதாரி ஆசிரியர்களுக்குச் சமமாகக் கல்விப் பகுதி அங்கீகரிக்க வேண்டுமெனக் கேட்கும் பிரேரணை ஒன்று இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா

**616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

**S. கனகசபை**

சிறுப்பர்

Std 14


# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 9—2—58—— 15—2—58. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உம்முடைய பிதாவழி இனத்தவர் உமக்கு இந்த வாரம் சிறிது கோபம் மூட்டககூடும். தேகசுகமும் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது செவ்வாய் புதனும் வியாழன் காலையும் எல்லாவற்றிலும் பழுதானவை, வார மிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3. 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

ஒரு தளப்பமான வாரம். குடும்ப வாக்குவாதங்களுக்கும் நண்பர்களுடன் பிழை எண்ணங்களுககும் இடமுண்டு, வியாழன் பிற்பகல் வெள்ளி சனி கவனமாய்க் கழிக்க வேண்டும். கந்தோரில் தொந்தரவுகளுக்கும் இடமில்லாமலில்லை.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

பணத்துறையில் நல்ல வாரம். போட்டியிடுவோரை வெல்லுதற்குமிடமுண்டு ஆனல் மனச்சமாதான மிருக்கமாட்டாது குடும்பச் சூழலிற் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

எதிர்ப்பு நீங்குவதைக் காண்பீர். புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும், குடும்ப சமாதானமும் போட்டியிடுவோரை வெல்லுதலும் நிச்சயம், ஆனல் நடுவாரததின் பின் சுகவீனங்களுக்கிடமுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்.

மனச்சமாதான மிருக்கமாட்டாது. தேக சுகமும் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. உமது நம்பிக்கைக்குத் துரோகஞ் செய்யக்கூடுமாகையால் உம்முடைய நண்பர்களை அதிகம் நம்பவேண்டாம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு சிறு அபாயங்கள்பற்றிச் சிறிது காலத்துக்கு எச்சரிக்கையாயிருககவும். பணதுறையில் நல்லவாரம். பகைவர் அழிவும் சமூகசித்தியும் நிச்சயம்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

ஒரு நல்ல வாரம், சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர். புது முயற்சிகளிற் சித்தியும் இனததவர்கள மூலம இலாபங்களும் நிச்சயம் ஆனல் தேக சுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

இனத்தவர்களுடன் சண்டைகளுக கிடமுண்டு. கண்நோய்களுக்கும் இடமுண்டு நீர் பெரும் பொறுப்புககளை ஏற்கவேண்டி வரும் நண்பர்களுடன் சணடைகளுக்கு மிடமுண்டு. ஆனல் இளைய சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

சிறிது காலத்துக்குத் தேகசுகம் சிக்கலாயிருக்கும் தேகததில் அளவுகடந்த சூடுண்டாகும். நீர் சணடை தொடுக்க முந்துவீர். பணத்துறையில் நல்ல வாரம்.

**மகாராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

எதிர்ப்பிருந்தபோதிலும் உம்முடைய கருமங்களை நீர் இந்த வாரம் செய்விக்கக்கூடியதாயிருக்கும். தனலாபங்களும் நிசசயம், ஆனல் தேக சுகம்பற்றிக் கவனமாயிருக்கவும், கண்நோய்களுக்கிடமுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

ஒரு மிக நல்ல வாரம், மிக இலகுவாக நீர் எதிர்ப்பை வெல்லக்கூடியதாயிருக்கும் தனலாபங்களும் நிச்சயம், பழைய அறிமுகமானோர் கருமங்களைச் செய்விப்பதற்கு அதிக உதவியாயிருப்பர்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

பணத்துறையில் நல்ல வாரம், சிறு முயற்சியோடு நீர் அதிக இலாபமடையக் கூடியதாயிருக்கும். ஆனல் மனச்சமாதானமிருக்கமாட்டாது. சுகவீனங்களுக்கும் இடமுண்டு.

## நாவலர் கழகத் திறப்பு விழா

———

பெரும்புகழ் பெற்ற இந்திய விஞ்ஞான கலாநிதி கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள் நாவலர் கழகத்தைத் திறந்து வைப்பாரென அறிய வருகின்றது. இக்கழகம் ஆரம்பமாகிச் சில மாசங்கள கழிந்த போதிலும் பகிரங்கமான திறப்புவிழா எதுவும் இதற்கு முன் செய்யப்படவில்லை இக்கழகத்தின்

## வடக்குக் கிழக்குத் துறைமுகங்கள்

——

வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் ஒவ்வொரு துறைமுகத்தைத் திறந்து வைக்கும்படி கேட்டுக்கொள்ளும் பிரேரணை ஒன்று தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி மகாநாடொன்றில் நிறைவேற்றப்பட்டது.

நோக்கம் தமிழ்மாணவருககுத் தனிச்சேவை செய்வதாகும்.

## ஆங்கிலமொழி கட்டாய பாடம்

———

### விசேஷ நிருவாகசபையின் தீர்மானம்

——

இது கல்வி அமைச்சர் நியமித்த விசேஷ நிருவாக சபை செய்துள்ள தீர்மானம். ஷ்டி நிருவாகசபை இலங்கையிலுள்ள பாடசாலைகள் எல்லாவற்றிலும் ஆங்கிலமொழி கட்டாய பாடமாதல் வேண்டும் என்னும் தீர்மானத்தைக் கூறியுள்ளது. ஆங்கில மொழியினை மூன்றாம் வகுப்பிலேயே ஆரம்பிக்க வேண்டும் என்று கல்வித்துறை நிபுணர்கள் கூறிய கொள்கையினை இந்த நிருவாக சபை ஏற்றுக்கொண்டது.

கல்விச் சட்டம் ஆங்கில மொழியினை மூன்றாம் வகுப்பில் ஆரம்பிக்க வேண்டும் என்று கூறுகின்றதன்றி அதற்கு முந்திய கீழ் வகுப்புக்களில் ஆரம்பிக்கக் கூடாதென்று கூறவில்லை. ஆதலின் வசதிகள் உண்டாயின் கீழ் வகுப்புக்களிலும் ஆங்கிலத்தை ஆரம்பிக்கலாம் என்று மேற்படி நிருவாகசபை கருதுகின்றது. பாலர் வகுப்பிலேயே ஒரு சில பாடசாலைகள் ஆங்கிலத்தை ஆரம்பிக்கும் போதும்?







யாழ்பாணம்-சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலககததில் வசிக்கும் [illegible] கந்தையா அவர்களால் 7-2-58 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org